1994 மார்ச் 25]

(ஆ) ஆம் எனில், இதற்காக தனியாக நிதி ஒதுக்கி வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்பு கவன ஈர்ப்பு

இராயபுரம் காவல் நிலையத்தில் ஒரு கைதி இறந்ததாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று முன்தினம் இராயபுரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்ததாகத் தெரிவித்து அது பற்றிய பிரச்சினையை, பேரவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று திரு. அ. செல்வராசன், திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் என்னிடத்திலே அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். அன்று அதை அனுமதிக்க முடியாது என்று நான் சொல்லி, பின்னர் அதை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருந்தேன். அன்று அதற்கு நான் அனுமதி மறுத்து இருந்ததால் இன்று அதை தனிக் கவன ஈர்ப்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். அதே பொருள்பற்றி இன்று திரு. சி. ஞானசேகரன், திரு. இளம்வழுதி ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதைத் தனிக் கவன ஈர்ப்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) திரு. வே. தம்புசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். திரு. பழனிசாமி வந்தால், திரு. தம்புசாமி அவர்களும் வந்துவிடுவார்கள். (சிரிப்பு) திரு. அ. செல்வராசன்.

***திரு. அ. செல்வராசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அனுமதி கொடுத்ததற்கு நன்றி. லோகநாதன் என்ற

[திரு. அ. செல்வராசன்] [1994 மார்ச் 25

35 வயது வாலிபன் 23-2-1994 அன்று இராயபுரம் காவல் நிலையத்திலே காவல் துறையினரால் பிடித்துக் கொண்டு வரப்பட்டு, அவனை அடித்துக் கொன்றிருக்கிறார்கள். அவன் ஒரு ஏழை லாரி கிளீனர். அவனுக்கு மல்லிகா என்கிற 28 வயது நிரம்பிய மனைவியும், சரவணன் 9 வயது, மேனகா 5 வயது பெண் குழந்தைகளும், முறையே அவர்கள் 4-வது, 2-வது வகுப்பும் படித்து வருகின்றார்கள். லோகநாதனை அதிகாலை 4 மணிக்கு மேற்கு மாம்பலத்தில் உள்ள அவனது உறவினர் வீட்டிலிருந்து இராயபுரம் காவல் நிலையத்திற்குக் காவல் துறை அதிகாரிகள் பிடித்துக் கொண்டுவந்து, இராயபுரம் காவல் நிலையத்தில் மிகக் கொடுமையாகத் தாக்கி சாகடித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோகநாதனைக் காவல் துறையினர் பிடித்துக் கொண்டுவந்து, காவல் நிலையத்தில் கொடுமையாகத் தாக்கி சாகடித்து இருக்கிறார்கள் என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குக் கிடைத்த தகவல் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். நீங்கள் அப்படிச் சொல்லாததால் தான் மாண்புமிகு அமைச்சர் எழுந்திருக்கிறார்.

திரு. அ. செல்வராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அடித்துக் கொன்றதாக எனக்குத் தக்வல் வந்திருக்கிறது. அப்படியே சொல்லுகிறேன். அதில் ஒன்றும் தவறு இல்லை. எப்படியோ அவன் இறந்திருக்கிறான். அதுதான் நான் சொல்லவந்த கருத்து. அதுதான் என்னுடைய எண்ணம். இந்த நிகழ்ச்சி எப்படி ஏற்பட்டது என்று நான் விசாரித்தேன். லோகநாதனுக்கும் எட்டியப்பன் என்பவருக்கும் முன்விரோதம் காரணமாக 21 ஆம் தேதி இரவு, சுமார் 10 மணிக்கு சச்சரவு ஏற்பட்டதாகவும் அதிலே ஒருவரையொருவர் தாக்குகின்றபோது எட்டியப்பனுக்குக் காலிலே அடிப்பட்டதாகவும், அவன் காவல் நிலையத்திலே புகார் கொடுத்ததாகவும், எனக்குச் செய்தி. ஆகவேதான், காவலர்கள் லோகநாதனை அழைத்துவந்து அடித்திருக்கிறார்கள். அவனைப் பிடிப்பதற்கு முன்பாக அவனுடைய சகோதரி வனசுந்தரியையும், அவனுடைய தம்பிகள் பாஸ்கரன், டில்லி, மைத்துனன் விஜி ஆகியோரையும் பிடித்து அடித்து விசாரித்திருக்கிறார்கள். இந்தச் செய்தி எங்களுடைய கட்சியைச் சார்ந்த சென்னை மாவட்ட பொறுப்பு குழுத் தலைவர் இராயபுரம் ஏழுமலைக்குத் தெரிந்து, அவரும் காவல் நிலையத்திற்குச் சென்று, அதுபற்றி விசாரித்திருக்கின்றார். அதற்குச் சரியானத் தகவலை யாரும் சொல்லாததனாலே எனக்கு அவர் தொலைபேசி மூலமாகச் செய்தி தந்தார். நான் நம்முடைய சபை

1994 மார்ச் 25] [திரு. அ. செல்வராசன்]

முடிந்த பிறகு 2½ மணிக்கு அங்கே சென்றபோது, அங்கே டி.சி. (நார்த்) அவர்கள் இருந்தார். அவரை நானும், ஏழுமலை, வழக்கறிஞர் ராதா கிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம் சென்று கேட்டோம். அவருடைய சகோதரியையும். இரண்டு சகோதரர்களையும், ஒரு மைத்துனரையும் அவர்கள் காவல் நிலையத்திலே கைது செய்து வைத்திருந்தார்கள். அவர்களையும் சேர்த்து, நாங்கள் கேட்டபிறகுதான் அவர்கள் வெளியே அனுப்பினார்கள், அந்த டி.சி. அவர்கள். பிறகு அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைப் பெற்றிருக்கிறார்கள். இந்த நேரத்திலே, நான் காவல் துறை . . . .

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. அ. செல்வராசன் : இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. முடித்துவிடுகிறேன். இந்த நேரத்திலே காவல் துறையிலே நல்லவர்களும் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறையினரால் மரணம் அடைந்த லோகநாதனுடைய குடும்பம் இன்று நடுத்தெருவிலே நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவருடைய மரணத்தைப் பற்றி விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவருடைய தலைமையில் விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குற்றத்தில் சம்பந்தப்பட்ட காவல் துறையினர் பணிநீக்கம் செய்யப்பட வேண்டும். காவல் துறையினரால் கொலை செய்யப்பட்ட லோகநாதன் குடும்பத்திற்கு நஷ்டஈடு தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, தமிழக காவல் துறை இழைத்த மாபெரும் கொடுமைக்கு தமிழக அரசு முழுப் பொறுப்பேற்க வேண்டுமென்று கூறி, நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், இந்த இறப்புக்காக மற்றொரு இறப்பும், மற்றொரு சாவும் அங்கே நேர்ந்திருக்கிறது. இது ஒரு அதிசயம். அங்கே பதட்ட நிலையாக இருக்கும்போது, ஸ்டேட் பேங்கிலே வேலை செய்பவர்கள் வெளியே வந்திருக்கிறார்கள். அந்தப் பதட்டத்தைப் பார்த்து உள்ளேயே ஓடிவிட்டார்கள், திரும்பவும் அந்த பேங்கிற்குள்ளேயே. அங்கே காவலரிடமிருந்து, செக்யூரிட்டியிடமிருந்த துப்பாக்கியிலிருந்து திடீரென்று எதிர்பாராமல் குண்டு வெடித்து அவரும் மறைந்திருக்கிறார். அவரும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர். இந்த நேரத்திலே நான் அவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, இதன் மீது தக்க நடவடிக்கை எடுத்து விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும்,

அந்த மனைவி இளம் வயதானவர். 8-ஆம் வகுப்பு வரை படித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவருக்கு ஏதாவது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு வேலை போட்டுத் தந்து, அவருடைய எதிர்காலத்தை வளமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த இரண்டு பிள்ளைகளையும் கூட அரசே படிக்க வைக்கலாம் என்று கூறி, இந்த முக்கியமான விஷயம் பற்றி இங்கே விரிவாக விவாதிக்க நம்முடைய இதர அலுவல்களை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, நான் அதற்கு அனுமதி மறுத்துவிட்டேன். இது தனிக் கவன ஈர்ப்பு. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று சொல்லலாம்.

திரு. அ. செல்வராசன் : அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தனிக் கவன ஈர்ப்பு. அவர் அந்தத் தொகுதியைச் சார்ந்தவர் என்பதால் அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) பொதுப் பிரச்சினையாக இருந்தால் எல்லோருக்கும் கொடுக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21-3-1994 அன்று இரவு, இராயபுரம் பகுதியில், சென்னை துறைமுக பொறுப்புக் கழகத்தில் பணியாற்றும் எட்டியப்பன் என்ற தொழிலாளியை வழிமறித்து, இராயபுரம் காவல் நிலையத்தால், போக்கிரி, அதாவது ரவுடி என வகைப்படுத்தப்பட்ட லோகு என்கின்ற லோகநாதன், அரிவாளால் நெற்றியிலும் கால்களிலும் தாக்கிவிட்டு ஓடிவிட்டிருக்கிறார். எட்டியப்பனுக்கும், ,லோகநாதனுக்குமிடையே கொடுக்கல் வாங்கலில் இருந்த தகராறு காரணமாக, இந்தத் தாக்குதல் நடந்ததாகத் தெரிகிறது. எட்டியப்பன் அரசு பொது மருத்துமனையில் சேர்க்கப்பட்டு, இராயபுரம் காவல் நிலைய குற்ற எண் 667/94-ன் கீழ், இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 307-ன் கீழ், வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, 22-3-1994 அன்று அதிகாலை 4 மணியளவில், தி. நகர் தலையாரி தெருவில், லோகநாதன் ஒளிந்து கொண்டிருப்பதாகக் கிடைத்தத் தகவலின்பேரில், சில காவலர்களுடன் இராயபுரம் சட்ட-ஒழுங்கு ஆய்வாளர், திரு. காதர் மொய்தீன், அந்த இடத்திற்கு விரைந்து சென்றுள்ளார். அங்கே தலையாரி தெருவில், லோகநாதனை காவல் துறையினர் கண்டுபிடித்துள்ளார்கள். காவலர்கள் லோகநாதனை கைது செய்ய முயன்றபோது அவர் தப்பிக்க முயற்சி செய்ததோடு மட்டுமன்றி, கைது செய்ய வந்தவதையும் தடுத்துள்ளார். காவல் துறை

உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் என்பவரையும், காவலர் ராஜேந்திரன் என்பவரையும் தன்னிடமிருந்த வீச்சு அரிவாளால் தாக்கியுள்ளார். இருப்பினும், அவரை கைது செய்து அவரிடமிருந்த வீச்சு அரிவாளை பறிமுதல் செய்து, காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்து, லாக்கப்பில் வைக்கப்பட்டுள்ளார். காலை 11.45 மணிக்கு நீதிமன்றக் காவலில் லோகநாதனை அனுப்புவதற்காக, லாக்கப்பிலிருந்து வெளியே அழைத்து வரும்போது, லோகநாதன் தனக்கு நெஞ்சு வலிப்பதாகக் கூறியுள்ளார். காக்காய் வலிப்பு வந்ததற்கான அடையாளங்கள் தெரிந்துள்ளன. எனவே, அவர் அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, இராயபுரம் காவல் நிலைய குற்ற எண் 670/94-ல், குற்றவியல் முறை சட்டம், பிரிவு 174-ன் கீழ், வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கைக்காக சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின், நேர்முக உதவியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முற்பகல் 11.20

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர், அன்று மாலை, ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்று பிரேதத்தைப் பார்வையிட்டு, பின்னர் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கிடையில் லோகநாதன் மரணம் அடைந்ததன் எதிரொலியாக சில சமூக விரோத சக்திகளும், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின், ஒரு பிரிவைச் சார்ந்தவர்களும் இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெருவில் உள்ள கடைகளை உடனடியாக அடைக்குமாறு தகராறு செய்து, ஒரு பதட்ட நிலையை உருவாக்கியுள்ளார்கள். அதே சாலையில் அமைந்துள்ள, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா-வின் இராயபுரம் கிளையின் முன்பு, வங்கி பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவலர் நாராயணன், வங்கியை நோக்கி, சமூக விரோத கும்பல் ஓடி வருவதைக் கண்டு விரைந்து சென்று வங்கியின் வெளிப்புறக் கதவினைத் தாளிட்டதுடன் தனது துப்பாக்கியில் குண்டுகளை லோடு செய்துள்ளார். வெளியில் சத்தத்தைக்கேட்டு வங்கியின் காசாளர் (கேஷியர்) திரு. ராஜன் என்பவர் தனது அறையில் இருந்து வெளியே வந்தபோது, வங்கியின் காவலர் கையிலிருந்து துப்பாக்கி எதிர்பாராத விதமாக வெடித்து ராஜனின் இடது மார்பில் குண்டு பாய்ந்துவிட்டது. இது 'ஆக்சிடெண்டல்' ஆக, எதிர்பாராத விதமாக நடந்துவிட்ட செயலாகத் தெரிகிறது. திரு. ராஜன் உடனடியாக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே

அனுமதிக்கப்பட்டுள்ளார். சிகிச்சைக்குப்பயனின்றி, அவர் மருத்துவமனையில் இரவு 8.00 மணிக்கு மரணமடைந்தார். வங்கியின் காவலர் நாராயணன் என்பவர் கைது செய்யப்பட்டு, அவர் வைத்திருந்த துப்பாக்கி, காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. குற்ற எண் 671/94-ன் கீழ் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 304 (எ)-ன்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்று மாலை 4.00 மணியளவில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எ. செல்வராஜ் அவர்கள் சிலருடன் இராயபுரம் காவல் நிலையத்திற்குச் சென்று சம்பவத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து முழு விவரங்களைக் கேட்டறிந்த பிறகு, மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்காக சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளருக்கு அனுப்பப்பட்டதை அறிந்து, காவல் நிலையத்தை விட்டுச் சென்று விட்டார்.

சில சமூக விரோத சக்திகளும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் ஒரு பிரிவினைச் சார்ந்தவர்களும், காவல் துறையினரின் காவலில் இருக்கும் போது லோகநாதன் இறந்துவிட்டார் என்ற வதந்தியைப் பரப்பி இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெருவில் அமைந்துள்ள கடைகளை உடனடியாக அடைக்க வேண்டும் என்று தகராறு செய்துள்ளார்கள். அந்தப் பகுதியில் இதனால் பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்தச் சம்பவத்தின் போது பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றின்மீதும், டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 7 பேருந்துகளின் மீதும் கற்களை வீசி பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏற்படுத்திய பதட்டத்தின் காரணமாக ஒரு அச்சம் மிகுந்த சூழ்நிலை உருவாகி ஒரு அப்பாவி உயிர் பலியாவதற்கு வழிவகுத்துவிட்டது. அன்று கடைகளை அடைக்கும்படி தகராறு செய்தவர்கள் மீது காவல் துறை குற்ற எண் 672/94 மற்றும் 674/94-ன் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த வழக்குகளின் கீழ், அடையாளம் தெரியாத சில நபர்கள் தேடப்பட்டு வருகின்றார்கள்.

லோகநாதனின் மரணம் குறித்து விளக்கம் கேட்கவும், நியாயம் கேட்கவும் கூடுதல்ாகத் தகவல் கேட்கவும், காவல் நிலையத்தை அணுகலாம் ; என்னிடம் மனு கொடுத்திருக்கலாம். சாதாரண மக்களுக்கு இல்லாத வசதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. சட்டமன்றக் கூட்டத் தொடர் இருக்கும் போது சட்டமன்றத்திலும் இந்தப் பிரச்சினையை எழுப்பி, அரசிடமிருந்து விவரங்களைப் பெற முடியும். ஜனநாயக வழியில் நியாயத்தைப் பெறுவதற்கும், விவரங்களைப் பெறுவதற்கும் இத்தனை வழிமுறைகள் இருந்தும், சட்டத்தைத் தங்கள்

1994 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

கையில் எடுத்துக்கொண்டு தேவையற்ற பதட்டத்தை உருவாக்கி பொது அமைதிக்கு பங்கம் விளைவித்து பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிக்கும் முயற்சியில் சிலர் ஈடுபடுவதை நாம் அனுமதிக்கலாமா? பொறுப்பு அதிகம் உள்ளவர்களாகிய நாம் நடந்துகொள்ளும் முறையைப் பார்த்துத்தானே, பொது மக்களும் நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு ஒரு முன் மாதிரியாக நாம் இருக்க வேண்டாமா? பொதுச் சொத்துக்களை அழிப்பவர்களும், பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர்களும், தவறானதொரு முன்னோடியை வருங்கால சந்ததியினருக்கு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாது என்ற எனது கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11.25

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போர் மீது வழக்கு தொடர்ந்து, அவர்கள் சேர்ந்த அரசியல் கட்சி அல்லது இயக்கத்திடம் இருந்து, சேதத்தின் மதிப்பினை பெற வேண்டும் என்ற சட்டம் இயற்றப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்ற எண் 672/94 மற்றும் 674/94-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்காக, தனி காவல் துறை படை, Special Police Party காவல் துறை ஆய்வாளரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் குற்றவாளிகளை இந்தப் படை கண்டுபிடிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே இப்போது நான் இங்கே வெளியிட்ட விவரங்களிலிருந்து திரு. செல்வராஜ் அவர்கள் இராயபுரம் காவல் நிலையத்தில் லோகநாதன் என்பவர் அடித்துக் கொல்லப்பட்டார் என்று சொல்லியது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தி, தவறான செய்தி என்பது தெளிவாகிறது.

அதுமட்டுமல்ல, லோகநாதன் காவல் நிலையத்தில் இறந்தார் என்பதும் தவறான செய்தியேயாகும். அவர் ஸ்டேன்லி மருத்துவமனையில்தான் சில மணி நேரத்திற்குப் பிறகு இறந்திருக்கிறார். இதற்கு விசாரணைக் கமிஷன் தேவையில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதோடு, ஒரு அப்பாவி இறந்ததைப் பற்றி இங்கே திரு. செல்வராஜ் அவர்கள் குறிப்பிட்டு நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமென்று கூறியிருக்கிறார். நஷ்டஈடு வழங்குவதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும். ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் ஒரு பிரிவினரைச் சார்ந்தவர்கள்தான் சமூக விரோதிகளோடு சேர்ந்துகொண்டு அந்தப் பகுதியில் ஒரு பதட்ட

நிலையை ஏற்படுத்தியதால்தான் அந்த அப்பாவி பாங்க் கேஷியர் இறக்க நேர்ந்தது. ஆகவே அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் அவருடைய குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்குவதைப் பற்றி ஆலோசிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் திரு. செல்வராஜ் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே காவல் துறையைப் பொறுத்தவரை தேவையான நடவடிக்கையை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இதிலே வேண்டாம். திரு. செல்வராசன், நீங்கள் விளக்கம் கேட்டீர்கள். விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலேயும் ஒன்றுமில்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை. எப்போதும் அனுமதிப்பதில்லை. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். விதி 55–லே.... *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான், சொல்கிறேன். அதாவது அரசு சார்பிலே அதற்குப் பதில் சொன்னதற்குப் பிறகு அதன் மேலே விவாதம் அனுமதிக்கப்படுவது இல்லை. *(குறுக்கீடுகள்)* இதிலே மேற்கொண்டு எந்த விவாதமும் அனுமதிக்கமுடியாது. அடுத்த பிரச்சினை. *(குறுக்கீடுகள்)*

தென்னாற்காடு–வள்ளலார் மாவட்டம் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் ஒரு பெண் மர்மமான முறையில் மரணம் அடைந்தது பற்றிய பிரச்சினையில் பேரவைக்கு ஓர் அறிக்கை வைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை. அது முடிந்துவிட்டது. அதிலே மேற்கொண்டு விவாதம் அனுமதிக்க முடியாது. விவாதம் அனுமதிக்க முடியாது என்கிறபோது... *(குறுக்கீடுகள்)*

திரு. வே. தம்புசாமி : விசாரணை போடுங்கள் *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் விரிவாகத் தெரிவித்து, எனவே விசாரணை தேவையில்லை என்று அவர்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இது ஒரு ஸ்பெஷல் மென்ஷன்தான். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1994 மார்ச் 25]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரே தீர்ப்பு சொல்லி விட்டார் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் எந்தத் தீர்ப்பையும் இங்கே சொல்லவில்லை. லோகநாதன் என்பவருக்குக் காயம் ஏற்பட்டதாக அவர்கள் சொல்கிறார்கள். வேண்டுமானால் அந்தப் புகைபடங்களை கொடுக்கட்டும். நானும் பெற்றுக்கொண்டு பார்க்கிறேன். ஆனால் திரும்ப நான் தெளிவுபடுத்த விரும்புவது, அந்த லோகநாதன் என்பவர் ஒரு 'சார்ஜ் ஷீட்டட் ரௌடி'. அவர் ஏற்கனவே வீச்சு அரிவாளால் ஒருவரைத் தாக்கி அதனால்தான் அவரைக் கைது செய்ய சென்று இருக்கிறார்கள் காவல்துறையினர். அவரைக் கைதுசெய்யச் சென்றபோதுகூட அதனைத் தடுத்து வீச்சு அரிவாளால் காவல் துறையினரை அவர் தாக்கி காயப்படுத்தியிருக்கிறார். ஆகவே காவல் துறையினர் ஓரளவுக்கு ஃபோர்ஸ்-ஐ பயன்படுத்தித்தான் அவரைக் கைது செய்ய முடியும். வீச்சரிவாள் வைத்துக்கொண்டிருப்பவரை கைப் பிடித்து மெதுவாக அழைத்துக்கொண்டா செல்ல முடியும்? Police have to use minimum force in such circumstances. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் வேண்டாம். விவாதம் அனுமதிப்பதில்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டக் காவல் நிலையப் பிரச்சினை பற்றி ஒரு அறிக்கை வைக்க அனுமதி கோரியிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இதிலே இப்படிப் பேசக்கூடாது. *(குறுக்கீடுகள்)* விதி இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* இல்லை, எந்த விதியின்கீழ் இங்கே நீங்கள் இப்படி வற்புறுத்துகிறீர்கள்? ஏதாவது ஒரு விதியின்கீழ் வற்புறுத்துங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, ஒரு மரபைப் பின்பற்றி இதை அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்த மரபின்படி மேற்கொண்டு விவாதம் அனுமதிப்பதில்லை. *(குறுக்கீடுகள்)* அதை நீங்கள் வேறு வகையிலேதான் எழுப்ப வேண்டும். இப்பொழுது, at this moment விவாதம் அனுமதிப்பதில்லை, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, கிளாரிபிகேசன்தான் சொன்னேன், கிளாரிபிகேசன் என்பதுகூட விவாதம்தான், அவ்வாறு அனுமதிப்பது இல்லை, உடகாருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, அனுமதி இல்லை. *(குறுக்கீடுகள்)* மேற்கொண்டு இப்பொழுது நீங்கள் எழுந்து *(குறுக்கீடுகள்)* அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடாது. *(குறுக்கீடுகள்)* இல்லை, முறை இல்லை, தயவு செய்து உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* தயவுசெய்து உட்காருங்கள்.

(குறுக்கீடுகள்) எந்த விதியின்கீழ் 4 பேர் நின்றுகொண்டு இருக்கிறீர்கள்? முறை இல்லை, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) தாமரைக்கனி உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையை இப்போது பேரவைக்கு வைப்பார்கள். (குறுக்கீடுகள்)

3. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் ஒரு பெண் சந்தேகமான முறையில் மரணம் அடைந்தது குறித்தும், அதுபற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முத்தாண்டிக்குப்பம் சம்பந்தமாக (குறுக்கீடுகள்) இல்லை, அதைதான் நான் சொல்கிறேன். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) இல்லை, அதுபற்றியும் சொல்லிவிடுகிறேன். இல்லை உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி. பழனிசாமி, திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன், திரு. பரிதி இளம்வழுதி, திரு. சா. பன்னீர்செல்வம் ஆகியோர் விதி 56-ன்கீழ் ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். அவர்கள் அறிவிப்புகொடுப்பதற்கு முன்னரே இந்தப் பிரச்சினைப் பற்றி பேரவைக்கு விதி 110-ன்கீழ் அறிக்கை வைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரி இருந்த காரணத்தால், உறுப்பினர்களுக்கு அனுமதி மறுத்திருந்தேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில், வசந்தா என்கின்ற பெண்மணி, சந்தேகமான முறையில் மரணம் அடைந்து கிடந்தது குறித்தும், அது தொடர்பாக தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும், இந்த மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, சில விவரங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஒரு அறிவிப்பினையும், இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.